# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

புதன்கிழமை 06.10.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# சமுக தீர்வு எட்டப்படுகின்ற வரை கல்முனை மாநகர முதல்வராக தமிழரை நியமிக்க நடவடிக்கை எடுங்கள்

## பாராளுமன்றில் கோதித்த ஸ்ரீதரன் கோரிக்கை வைத்த இராஜாங்க அமைச்சர்





(காந்தன்)

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் இனவாதக் கருத்துக்களை பதிவு செய்வதாகவும், அவற்றை நாடாளுமன்ற பதிவேற்றிலிருந்து நீக்குமாறு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன கோரிக்கை விடுத்தார்.

இலங்கையில் சிறுவர் தினத்தைக் கொண்டாடும் அதேவேளை

02 ஆம் பக்கத்தில்...

## ஹக்கீமுக்கு கிழக்கு தேசம் வஃபா பாருக் வலியுறுத்து



(தர்மேந்திரா)

கல்முனை தமிழ் பிரிவு விவகாரத்துக்கு சுமூகமான, நீதியான தீர்வு எட்டப்படுகின்ற வரை தமிழர் ஒருவரை கல்முனை மாநகர முதல்வராக நியமிக்க நடவடிக்கை எடுங்கள் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை இக்கட்சியின் ஸ்தாபக பொருளாளர் கிழக்கு தேசம் வஃபா பாருக் கோரி உள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## க.போ.த.சா.தர பரீட்சையில் மீண்டும் வடக்கு,கிழக்கு இறுதி இடங்களில்!

(வி.ரி.சகாதேவராஜா)

இம்முறை வெளியான க.பொ.த. சாதாரண தர பெறுபேற்றின் பகுப்பாய்வைப்பார்க்கும்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இறுதி நிலையிலிருப்பதை புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் 9மாகாணங்கள் உள்ளன. அவற்றில் கிழக்கு மாகாணம் எட்டாவது(8) இடத்திலும் வடக்கு மாகாணம் ஒன்பதாவது(9) இடத்திலும் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் முதல்நிலையிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைத்திணைக்களம் வெளியிட்டுள்ள இடைக்கால பெறுபேற்றின்படி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் கோரோனா தோற்றாளர்களின் எண்ணிக்கை வேகுவாக குறைந்துள்ளது!




(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாகவும் 92 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 85 வீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...

## சீனாவுடனான இலங்கையின் தொடர்புகள் குறித்து சந்தேகம் கொள்ள வேண்டாம்

### இந்திய வெளிவிவகாரச் செயலாளரிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



இணக்கப்பாடுகளுடன் எட்டப்படும் இருதரப்புத் தீர்மானங்களை, இரு நாடுகளினது மக்களுக்கு சரியான முறையில் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென்று, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

நன்மை, தீமைகளை எடுத்துரைத்து, பெரும்பான்மையான மக்களின் விருப்பத்துடன் செயலாற்றுவது அத்தியாவசியம் என்றும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளருடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில், 1960, 70ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

## போருக்குப் பின்னரான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக இலங்கை உறுதி

போருக்குப் பின்னரான முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாக இலங்கை உறுதியளித்தது.

இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள், அமைதி மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான அனைத்து பிரச்சினைகளிலும் உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளதாக ஜெனீவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில்

02 ஆம் பக்கத்தில்...

## மண் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம்



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக மண் அகழ்வை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கு இடங்களை பார்வையிடுவதற்கு அதிகாரிகள் வருகை தந்த போது விவசாயிகள் ஒன்றுகூடி மண் அகழ்வினால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாகவும் மண் அகழ்வுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

02 ஆம் பக்கத்தில்...






## நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வினை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியிலுமுள்ள 312 கோட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்

02 ஆம் பக்கத்தில்...

## வியாழேந்திரன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை இந்துமயானத்தில் புதைத்ததற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

02 ஆம் பக்கத்தில்...

## இலஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பெயரில் அரச உத்தியோகஸ்த்தர் ஒருவர் கைது

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று களுதாவளை பிரதேச சபையில் பணிபுரியும் வருமானவரி பரிசோதகர் ஒருவர் செவ்வாய்கிழமை(05) இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கொழும்பிலிருந்து வருகை

02 ஆம் பக்கத்தில்...











## மட்டக்களப்பு மக்களுக்கான அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி பெய்து வருகின்ற மழையினால் டெங்கு நோய் பரவுவதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுவதாக சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும்.

அரசு மற்றும் சுகாதார திணைக்களத்தினரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை உடனடியாக துப்பரவு செய்து நீர் தேங்காத வகையில் சரி செய்து கொள்ள வேண்டும்.

வீடுகளில் வசிக்கும் குழந்தைகள்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பு மக்களுக்கான அறிவிப்பு

வயோதிபர்கள் மற்றும் ஏனையோரின் பாதுகாப்பு கருதி வீட்டு சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொவிட் முடக்க நிலை காரணமாக நீண்ட நாட்களாக இயங்காமல் இருந்த அலுவலகங்கள், பாடசாலைகள், வழிபாட்டுதலங்கள், பொதுச்சந்தைகள் மற்றும் அனைத்து பொது இடங்களையும் சுத்தம் செய்த பின்னரே மக்கள் பாவனைக்கு உட்படுத்துவதற்கு பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அடிக்கடி பெய்து வருகின்ற மழையினால் நீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் காணப்படுவதினால் மக்கள் அவதானத்துடன் செயற்படுவது மிகமிக அவசியமாகும்.

## நாடளாவிய ரீதியில் ஆசிரியர்கள் இன்று

செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நீண்ட நாட்களாக நிலவி வரும் அதிபர் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தி எம்மால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்றுடன் 87 நாட்களாக தொடர்கிறது. எனினும் அரசாங்கம் இதுவரையிலும் எமக்கான நிரந்தர தீர்வினை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றுவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் அதனை நாம் நிராகரிக்கின்றோம்.

அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைகளை ஒரே தடவையில் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். 5000 ரூபா கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்களை நம்பி ஏமாறுவதற்கு நாம் தயாராக இல்லை.

எனவே தான் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளோம். இந்நிலையில், இன்று காலை 10 மணிக்கு கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி , லிப்டன் சுற்று வட்டம் வரை தொடரவுள்ளது.

இதே போன்று நாடளாவிய ரீதியிலுள்ள 312 கல்வி கோட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் ஜோசப் ஸ்டாலின் மேலும் தெரிவித்தார்.

## வியாழேந்திரன் உள்ளிட்ட ஐந்து பேருக்கு

கடந்த 2019 ஏப்பிரல் உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதலை மேற்கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலை குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகத்தை கள்ளியன்காடு இந்து மயானத்தில் பொலிஸார் புதைத்தனர்.

இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தமை தொடர்பாக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் , இணைப்புச்செயலாளர் யோ. ரொஸ்மன் , இளைஞர் ஒருங்கிணைப்பாளர் அனோஜன் மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன் மற்றும் அருள்தாஸ் சுசிகலா ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் கார்த்திகை மாதம் 10ம் திகதிக்கு நீதிமன்றத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் மாநகர சபை உறுப்பினர் செல்வி மனோகரன் கடந்த மாதம் புற்றுநோய் பாதிப்பினால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## மண் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம்

கிரான் பிரசே செயலாளர் பிரிவில் மண் அகழ்வை மேற்கொள்வதற்காக அனுமதி கோரி இரண்டு விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் குறித்த இடங்களை பார்வையிடுவதற்காக திணைக்களங்களுடன் இணைந்து பிரதேச செயலக அதிகாரிகளும் இன்று கள விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது வாகனேரி நீர்ப்பாசனத்திட்டத்தில் பட்டியடி வகுலாவெல, ஆனமடங்கி, தவனை, பிரம்படித்தீவு, நூறு ஏக்கர், மக்குரானை, பள்ளிமடு போன்ற விவசாய கண்டங்களைச் சேர்ந்த பதினையாயிரம் ஏக்கருக்கும்; அதிகமான விவசாய காணிகள் மண் அகழ்வினால் பாதிக்கபடுவதாகவும் மீண்டும் இப்பகுதியில் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் விவசாய நிலங்கள் இன்னும் பாதிக்கப்படும் என்பதனால் இப்பகுதியில் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்றும் இப்பகுதயில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மண் அகழ்வு இடம் பெறுவதாகவும் அதனை இடைநிறுத்தி தருமாறும் விவசாயிகள் வருகை தந்த அதிகாரிகளிடம் கோறிக்கை விடுத்தனர்.

விண்ணப்பதாரிகள் தாங்கள் அடையாளப்படுத்திய இடங்கள் நீர்ப்பாசனத்திட்டத்திற்குள் வருவதால் இது தொடர்பாக நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரிகள் தங்களது அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்று கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தெரிவித்தார்.

## போருக்குப் பின்னரான பிரச்சினைகளுக்கு

சமீபத்தில் தெரிவித்ததாக அவர் இதன் போது தெரிவித்தார்.

இந்த சவால்களை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அந்த முயற்சியில், ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மற்றும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட சர்வதேச கருத்துக்களுக்கு பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## பாராளுமன்றில் கொதித்த ஸ்ரீதரன்

பாலகன் பாலச்சந்திரனை இரக்கமற்ற வகையில் இராணுவம் சுட்டுக்கொன்றதாக ஸ்ரீதரன் குற்றம்சாட்டியிருந்த நிலையில், இடையில் குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்திருந்தார்.

குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன, முன்னாள் அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களுக்கு எதிராக போராட்டம் நடத்தவில்லை எனவும், மாறாக பயங்கரவாத்திற்கு எதிராகவே யுத்தத்தினை நடத்தியிருந்தார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு இனவாதம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பேசிய கருத்துக்களை நாடாளுமன்ற பதிவேற்றிலிருந்து நீக்குமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.




## செங்கலடி பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இதுவரை 64 ,500 பேருக்கு தடுப்பூசிகள்

**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இதுவரை 64 ஆயிரத்து ஐந்நூறுபேர் கொவிட் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டுள்ளதாக பிரதேச சுகாதார உதவி வைத்தியதிகாரி திருமதி கஸ்தூரி குகன் 05.10.2021 தெரிவித்தார்.

சுமார் 37 ஆயிரம்பேர் முதலாவது டோசினையும் 27 ஆயிரத்து ஐந்நூறுபேர் இரண்டாவது டோசினையும் பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலேயே மிகவும் வறிய மக்களைக்கொண்ட அதிகளவிலான குக்கிராமங்கள் காணப்படுகிறன.

எனினும் இம்மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் பாடசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகள் உள்ளிட்ட பல பொது கட்டடங்களில் தடுப்பூசி வழங்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

வயது அடிப்படையில் கட்டங்கட்டமாக தடுப்பூசி வழங்கும் பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் தற்போது இருபது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக பல்வேறு வழிகளில் பொதுமக்களுக்கு வழிப்பூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்தியதிகாரி இ. சிறிநாத் தெரிவித்தார்.

## சீனாவுடனான இலங்கையின் தொடர்புகள் குறித்து சந்தேகம்

நட்புணர்வு மற்றும் தொடர்புகளை மீளக் கட்டியெழுப்புவதன் அவசியம் பற்றி, ஜனாதிபதி அவர்கள் தெளிவுபடுத்தினார்.

1971இல், இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக மாற்ற வேண்டுமென்று, அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முன்வைத்த யோசனையைச் செயற்படுத்துவதற்கான பலத்தை அதிகரித்துக்கொள்ள, இந்தியாவின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை உயர் மட்டத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டுமாயின், குறுகிய மற்றும் நீண்டகாலத் தேவைகளின் பொருட்டு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் துல்லியமாக அடையாளம் காணவேண்டுமென்பது, இரு தரப்பினதும் கருத்தாக அமைந்திருந்தது.

தற்போது காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை விரைவாக அடையாளம் காண்பதுடன், மீனவச் சமுதாயத்துக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து, இரு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியத்தையும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கு இடையில் காணப்படும் வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் தொடர்பிலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, அவற்றுக்கு விரைவில் தீர்வு வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணக் கோட்டையை மீட்ட தனது அனுபவத்தை எடுத்துக்கூறிய ஜனாதிபதி, காணாமற்போனோர், யுத்தம் காரணமாக கணவரை இழந்தோர் உள்ளிட்ட யுத்தத்தின் பக்க விளைவுகள் பற்றி, தான் நல்ல புரிதல் கொண்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பலவீனங்களைப் போன்றே அதில் காணப்படும் பலம் தொடர்பிலும் கண்டறிந்து செயற்படுவதன் தேவை தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார். இலங்கையிலிருந்து சென்ற தமிழ் மக்களை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது தனது எதிர்பார்ப்பென்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களை வெற்றிகரமானதாக்கிக்கொள்ள, ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடரின் போது உரையாற்றி, புலம்பெயர் தமிழர்களுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்ததாகவும், ஹர்ஷ் வர்தன் ஷரிங்லாவிடம் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காகதத் தனது அரசாங்கம் கடந்த காலங்களில் முன்னெடுத்திருந்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, யுத்த காலத்தின் போது பாதுகாப்புத் தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்த காணிகளில் 90 சதவீதத்துக்கும் மேலானவை, அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும், ஜனாதிபதி அவர்கள் எடுத்துரைத்தார்.

அதேபோன்று, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தால் ஏற்பட்ட ஏனைய பிரச்சினைகளுக்கும் உடன் தீர்வு வழங்குவதற்கான தேவை தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இரு நாடுகளினதும் புவியியல் இருப்பிடம் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வு இருப்பின், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய எந்தவொரு செயற்பாட்டுக்கும் இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள இடமளிக்கப் போவதில்லை என்றும், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே ஆகியோரும், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

## இலஞ்சம் பெற்றார் என்ற சந்தேகத்தின் பெயரில் அரச

தந்த இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், மண்முனை தென் எருவில் பற்று களுதாவளை பிரதேச சபையில் பணிபுரியும் வருமானவரி பரிசோதகர் ஒருவரை தமது பிரதேச பையின் முன்னால் வைத்து கைது செய்து களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதாகத் தெரிவித்துவிட்டு கொண்டு சென்றதாக மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞானமுத்து யோகநாதன் தெரிவித்தார்.

பிரதேச சபையின் முன்னால் காரில் வந்த ஒருவரிடம் குறித்த வருமான வரி பரிசோதகர் இலஞ்சம் பெற்றதாகவும் அதனை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், அவதானித்து இலஞ்சம் கொடுத்தவரையும், வாங்கியவரையும் கைது செய்துள்ளதாகத் தெரியவருகின்றது. தற்போது இருவரும் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் கொரோனா தொற்றாளர்களின்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 29கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதுடன் எந்தவித மரணங்களும் இடம்பெறவில்லையெனவும் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 336மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் முடக்கத்திற்கு பின்னர் புதிய தொற்றாளர்கள் வெகுவாக குறைந்துவருவதாகவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் மூலமே மீண்டும் ஒரு கொத்தனி உருவாவதை தடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனால் புதிய தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதுடன் இறப்பு வீதமும் குறைந்துள்ளதாகவும் அனைவரையும் தடுப்பூசிபெற்றுக்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்தார்.

20வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமாறு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அருகில் உள்ள வைத்தியசாலைகளிலோ,சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலோ தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இவை 12 தொடக்கம் 19வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் கிளினிக்சென்றுவரும் சிறுவர்களுக்கும் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவ்வாறானவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் இந்த தடுப்பூசிகளை உரியவர்கள் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவித்தார்.

## க.பொ.த.சா.தர பரீட்சையில் மீண்டும் வடக்கு,கிழக்கு இறுதி

தென் மாகாணம் முதலிடத்திலும் ,வடமேல் மாகாணம் இரண்டாவதுஇடத்திலும் ,மேல் மாகாணம் மூன்றாவது இடத்திலும் வந்துள்ளது.

ஊவா ,மத்திய ,சபரகமுவ ,வடமத்திய மாகாணங்கள் முறையே 4ஆம் ,5ஆம், 6ஆம் ,7ஆம் இடங்களிலும் உள்ளன.

**99 வலயமட்ட முடிவுகள்**

இதேவேளை பரீட்சைத்திணைக்களம் வெளியிட்டுள்ள வலய மட்ட பெறுபேறுகளின்படி வடக்கு கிழக்கிலுள்ள பெரும்பாலான வலயங்கள் பின்னிலையிலிருப்பதைக் காணலாம்.

எனினும் இலங்கையிலுள்ள 99 வலயங்களில் அக்கரைப்பற்று வலயம் முதல் பத்து நிலைகளுள் வந்துள்ளது. அதாவது 9ஆவது இடத்தில் இருப்பது பாராட்டுக்குரியது.

அதேவேளை, அம்பாறை 23ஆவது இடத்திலும், திருக்கோவில் 25ஆவது இடத்திலும் ,மகாஓயா 26ஆவது இடத்திலும் ,கல்முனை 29ஆவது இடத்திலும், மட்டக்களப்பு மத்தி 33 ஆவது இடத்திலும் ,மட்டக்களப்பு 46ஆவது இடத்திலும் ,தெஹியத்தக்கண்டிய 57ஆவது இடத்திலும் ,மூதூர் 74ஆவது இடத்திலும், சம்மாந்துறை 78ஆவது இடத்திலும் ,பட்டிருப்பு 84ஆவது இடத்திலும், திருகோணமலை 87ஆவது இடத்திலும் ,கந்தளாய் 90ஆவது இடத்திலும், கல்குடா 91ஆவது இடத்திலும், மட்டு.மேற்கு 94ஆவது இடத்திலும், கிண்ணியா 97ஆவது இடத்திலும் ,திருமலை வடக்கு 98ஆவது இடத்திலும் காணப்படுகின்றன.

## சமூக தீர்வு எட்டப்படுகின்ற வரை கல்முனை மாநகர

இவர் நேற்று செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருதில் ஊடகவியலாளர்களை சந்தித்து சமகால அரசியல் நடப்புகள் தொடர்பாக பேசியபோது மேலும் தெரிவித்தவை வருமாறு

யார் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் முஸ்லிம்களின் ஆளுமை மிக்க தலைமையாக சர்வதேச மட்ட்டத்திலும் அங்கீகாரம் பெற்று இருப்பவர் ரவூப் ஹக்கீமே ஆவார்.

ஆனால் துரதிஷ்டமாக அவரின் தலைமை காலத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டு, புதிதாக இரண்டு கட்சிகளும் உருவாகி முஸ்லிம் தனித்துவ அரசியல் சின்னாபின்னம் ஆக்கப்ப்பட்டு விட்டது.

ஆனால் இந்த துயர நிலைக்கு ஒட்டுமொத்தமாக ஹக்கீம் மட்டும்தான் காரணம் என்று எவரேனும் சொன்னால் அது தவறு ஆகும். ஸ்தாபக தலைமைகளுக்கு பின்னரான கட்சி தலைமைகளின் காலத்தில் எல்லா கட்சிகளிலும் பிளவுகள் நிகழ்ந்து உள்ளன.

ஸ்தாபக தலைமைகளுக்கு எப்போதுமே கட்சி யாப்புக்கு அப்பாலும் கட்சி மீது உரிமை இருப்பதே விசேட கட்டுக்கோப்புக்கு காரணம் ஆகும். பின்னரான தலைமைகளுக்கு அந்த விசேட தத்துவம் இருப்பதில்லை. அதனால் பிளவுகள் தவிர்க்க முடியாதவையாக நடந்து விடுகின்றன. அதுவே ஹக்கீமின் காலத்திலும் நடந்தது, நடக்கின்றது.

ஸ்தாபக தலைவரின் காலத்தில் கட்சியின் தேசிய பட்டியலை முஸ்லிம் அல்லாத ஒருவருக்கு அன்பளித்தபோதும் கட்சி செயற்பாட்டாளர்களில் ஒரு தொகையினர் கொதித்து எழுந்தனர். ஆனால் ஸ்தாபக தலைவர் அவரின் முடிவே இறுதியானது என்று சொல்லி முற்று புள்ளி வைத்தார். அதற்கு அப்பால் ஒருவரும் வாய் திறக்கவில்லை.

கல்முனையின் பிரதி மேயர் பதவியை சகோதர தமிழ் இனத்தை சேர்ந்தவருக்கு வழங்கிய போதும் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக கொதித்து எழுந்தார்கள். ஆனால் ஹக்கீம் அசைந்து கொடுக்கவில்லை. அசையவும் கூடாது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸிடம் இருந்த மன்னார் பிரதேச சபைக்கான தவிசாளர் பதவியை மற்றொரு முஸ்லிம் கட்சியான மு. கா கைப்பற்றுவதை விட சகோதர தமிழ் சமூகத்துக்கு விட்டு கொடுப்பது அரசியல் ரீதியாக மிகுந்த தூர பார்வை மிக்க நிலைப்பாடு ஆகும்.

ஆனால் துரதிஷ்டமாக இந்த நிலைப்பாட்டின் எதிர்கால நன்மைகள் உரையாடப்படவில்லை. அரசியல் அமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்கியதில் இருந்து இன்று வரை அரசாங்கத்துக்கு ஆதரவாக இயங்கி கொண்டிருக்கும் கட்சியின் எம். பிகளின் நிலைப்பாட்டில் மாற்றம் நிகழ வேண்டும் என்கிற அர்த்தத்தில் ஹக்கீம் பேசி இருந்தார். அதில் நாமும் உடன்படுகின்றோம்.

உண்மையாகவே தமிழ் பேசும் மக்களுக்கு இடையிலான சக வாழ்வை கருத்தில் கொண்டு உள்ளூராட்சி சபைகளின் தலைமை மற்றும் உப தலைமை போன்றவற்றை சகோதர சமூகத்தை சேர்ந்த கட்சிக்கு விட்டு கொடுக்கின்ற கடப்பாடு மு. காவுக்கு இருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் மாகாணத்தின் முதலமைச்சர் பதவியையே விட்டு தந்தவர்கள்.

ஆனால் தமிழ் மக்களின் மனங்களை வெல்வதற்கான அரிய வாய்ப்பை மு. காவின் முதலமைச்சர் தவற விட்டு விட்டார். எம்மை பொறுத்த வரை கல்முனை மாநகர சபையின் எஞ்சி உள்ள மிகுதி காலத்துக்கு தமிழர் ஒருவர் மேயராக நியமிக்கப்பட வேண்டும். அதே போல காரைதீவு பிரதேச சபையின் மிகுதி காலத்துக்கு முஸ்லிம் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்பட வேண்டும்.

இனவாதம், பிரதேசவாதம் ஆகியவற்றை வைத்து அரசியல் செய்யும் காளான்களை கவனத்தில் எடுக்காமல் ஹக்கீம் இதற்கான பணியை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கான தனியான செயலாளர் பிரிவு யாருக்கும் அநீதி இடம்பெறாத வகையிலான எல்லை பிரிப்பு மூலம் விரைவாக உருவாக்கி கொடுக்கப்பட வேண்டும்.

இவ்விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினர்களான கல்முனை நஸீர் ஹாஜி, சட்ட முதுமாணி வை. எல். எஸ். ஹமீத் ஆகியோரின் ஆலோசனைகளை ஹக்கீம் பெற்று கொள்வது உசிதம். ஏனென்றால் ஹக்கீமை விட இருவரும் கட்சி அங்கத்துவத்தின்படி சீனியர்கள்..அவர்களை ஹக்கீம் தொடர்பு கொள்வதில் சங்கடப்பட தேவை இல்லை.

கல்முனையின் தமிழ் பிரிவு விவகாரத்துக்கு சுமூகமான, நீதியான தீர்வு எட்டப்படுமாயின் சக வாழ்வுக்கான தடைகள் நிச்சயம் நீங்கி விடும். அது வரை கல்முனைக்கான மேயராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அதற்கு உரிய சட்ட ரீதியான சாத்தியப்பாட்டை ஹக்கீம் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

# கல்வி வீழ்ச்சிக்கான காரணத்தைத் தேடாது சம்பளத்தில் கை வைப்பதிலேயே கிழக்கு நிருவாகம் குறியாக இருக்கின்றது

கிழக்கு மாகாணம் தற்போது கல்வியில் மிகப் பின்னடைவினை அடைந்துள்ளது. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரோ, பிரதம செயலாளரோ, கல்விச் செயலாளரோ எவ்விதமான நடவடிக்கைகளையோ, கருத்துகளையோ குறிப்பிட முடியாத நிலயில் இருக்க ஆசிரியர்களின் சம்பளத்தில் கை வைப்பதிலேயே குறியாக இருக்கின்றார்கள் என இலங்கை ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் மடட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஒரு சுற்றுநிரூபம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் கொவிட் நிதியத்திற்காக அதிபர், ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளத்தை அறவீடு செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே எனது அனுமதியின்றி எனது சம்பளத்தில் இருந்து கொவிட் நிதியத்திற்கு ஒருநாள் சம்பளம் அறவிடப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் எனது அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அந்த நிதி மீள வழங்கப்பட்டது. ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் மீள இடம்பெறும் என்பதன் காலணமாக அவ்வழக்கு அவ்வண்ணமே இருக்கத்தக்கதாக தற்போது இவ்வாறான தொரு சுற்றிநிரூபம் வெளியிடப்பட்டிருப்பதானது உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடகவே கருதுகின்றேன்.

இம்மாத சம்பளத்தில் இருந்து ஒருநாள் சம்பளத்தைக் கழிப்பதற்காக ஒப்புதல் கேட்டு பல பாடசாலைகளுக்கு படிவங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. உண்மையில் இது கண்டிக்கத்தக்க விடயமாகும். உச்சநீதிமன்ற வழக்கு இருக்கத்தக்கதாக கிழக்கு மாகாண நிருவாகம் ஏன் இவ்வாறாதொரு செயற்பாட்டினை செய்கின்றார்கள்.



கிழக்கு மாகாணம் தற்போது கல்வியில் மிகப் பின்னடைவினை அடைந்துள்ளது. கடந்தவருடம் ஏழாவது இடத்தில் இருந்து தற்போது எட்டாவது இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. அதிலும் பெரும்பாலான கல்வி வலயங்கள் மிக மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரோ, பிரதம செயலாளரோ, கல்விச் செயலாளரோ எவ்விதமான நடவடிக்கைகளையோ, கருத்துகளையோ குறிப்பிட முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

அதிலும் அளவுக்கதிகமான ஆசிரியார்கள் நிரம்பியுள்ள கல்வி வலயங்களே இவ்வாறாக மிகவும் பின்னடைவினைக் கண்டுள்ளது. இந்த நிலையில் இவர்கள் அதிபர்கள், ஆசிரியர்களின் ஒருநாள் சம்பளத்கை; கழிப்பதற்கான ஆர்வத்தில் இருக்கின்றார்கள். பெரும்பாலாள அதிபர்கள் ஆசியர்களின் விரும்பம் இல்லாமலேயே இவ் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து அனுப்பி பல ஆசிரியர்களின் விருப்பத்திற்கு மாறாக ஒருநாள் சம்பளம் கழிக்கப்பட்டும் இருக்கின்றது.

அதிபர் ஆசிரியர்களின் சம்பளங்களில் கழிப்பினை மேற்கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டககளப்பு, பட்டிருப்பு கல்வி வலயங்களே அதிக அக்கறை செலுத்துகின்றன. அதேவேளை தற்போது வெளியாகியுள்ள சாதாரணதரப் பரீட்சை பெறுபேற்றில் மிகவும் பின்டைவாக உள்ள வலயக் கல்வி பரிவுகளும் இவையாகவே இருக்கின்றது. இதிலிருந்து இங்குள்ள கல்வி அதிகாரிகள் யார் சார்பாக இருக்கின்றார்கள், எவர் சார்பாக நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கின்றார்கள் என்பது தெளிவாக விளங்குகின்றது. எனவே கல்வி அதிகாரிகள் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு கல்வியை அபிவிருத்தி செய்வது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இதேவேளை தொழிற்சங்க ரீதியில் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பில் அண்மையில் ஐரோப்பிய ஒன்றிய குழுவினருடான சந்திப்பில் முறைப்பாடொன்றினை சமர்ப்பித்திருக்கின்றோம்.

அத்துடன், நாளைய ஆசிரியர் தினத்தில் அதிபர்கள் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஐந்து வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் எமது போராட்டத்தினை நடாத்தத் தீர்மானித்திருக்கின்றோம். இதற்கு அதிபர்களும், ஆசிரியர்களும் ஒன்றிணையுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

## மீண்டும் 7 ம் திகதி வரை தொழிலாளர்களுக்கு விளக்கமறியல்

**தலவாக்கலை பி.கேதீஸ்**

தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தைச் சேர்ந்த 11 சந்தேக நபர்களின் விளக்க மறியல் நாளை 7 ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிளான்டேசன் கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கட்டுக்கலை தோட்டத்தில் தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 11 சந்தேக நபர்களையும் மீண்டும் நாளை % ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 28ம் திகதி கட்டுக்கலை தோட்டத்தில் தொழிலாளர்கள் சிலருக்கும் அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பில் முடிந்துள்ளது.

இச்சம்பவத்தில் தோட்ட தொழிலாளர்கள் சிலரால் தாக்கப்பட்டதாகக் கூறி அத்தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவர் நுவரெலியா பொது வைத்தியசாலையிலும் தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக கூறி இரு பெண் தொழிலாளர்கள் லிந்துலை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து தோட்ட உதவி அதிகாரி மீதும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 9 சந்தேக நபர்களை (தொழிலாளர்களை) தலவாக்கலை பொலிஸார் கைது செய்து கடந்த 1 ம் திகதி நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று 5ம் திகதி செவ்வாய்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதேவேளை தோட்ட உதவி அதிகாரி மற்றும் உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாக கூறி லிந்துலை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த இரண்டு பெண் தொழிலாளர்களும் அன்றையதினம் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது அவர்களையும் நேற்று 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார். அதன்படி (5.10.2021) நேற்றையதினம் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகிய 11 சந்தேக நபர்களையும் மீண்டும் நாளை 7ம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# இரசாயன உர பயன்பாட்டுக்கு அரசாங்கம் தடை தேயிலை பொருளாதாரம் பாதிக்கப்படக்கூடும்

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

**(க.கிஷாந்தன்)**

'உரிய மாற்று ஏற்பாடுகளின்றி இரசாயன உர பயன்பாட்டுக்கு அரசாங்கம் தடை விதித்துள்ளதால் தேயிலை பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும்.' என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் கூறியவை வருமாறு,

'சீனாவிலிருந்து சேதன பசளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முற்பட்டது. எனினும், கிடைக்கப்பெற்ற மாதிரிகளில் பக்ரீரியா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனை வெளிப்படையாக அறிவித்த விவசாய திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். உண்மையை மறைப்பதற்கு பல அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்கலாம். குறித்த சேதன பசளைக்கு அனுமதி வழங்கியிருந்தால் அதனால் மண்ணுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

தேயிலை உற்பத்திக்கு இரசாயன உரம் அவசியம். எனினும், நிபுணர்களின் ஆலோசனை மற்றும் மாற்று ஏற்பாடுகளின்றி எடுத்த எடுப்பிலேயே உர பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் உரிய விளைச்சல் கிடைக்கபதில்லை. தேயிலை பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் தாக்கம் இன்றும் 5 ஆண்டுகளில் தெரியவரும்.

அதேவேளை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தால் பரிந்துரைக்கப்படும் உரத்தை மட்டும் பயன்படுத்துமாறு சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.' என்றார்.

# சர்வதேச ஆசிரியர் தினத்தினை துக்கதினமாக அனுஷ்டிப்போம்

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

சர்வதேச ஆசிரியர் தினத்தினை துக்கதினமாக அனுஷ்டித்து வீடுகளில் கறுப்பு கொடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பாலசேகரம் தெரிவித்தார்.

ஆசிரியர் தினம் குறித்து தலவாக்கலை பகுதியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஆசிரியர்கள் இன்று 84 நாட்களுக்கும் மேலாக சம்பள முறண்பாட்டினை தீர்க்க கோரி போராடி வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு நியாயமான தீர்வு எதுவும் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. ஆசிரியர்களை பொறுத்த வரை ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த சம்பளத்தினையே பெறுகிறார்கள். ஏனைய துறைகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவும், போக்குவரத்து கொடுப்பனவும், வாகன வசதிகள், வீட்டு வசதிகள் என எல்லா கொடுப்பனவுகளம் உள்ளன.

ஆனால் ஆசிரியர்களும் அதே சேவையினை செயகின்ற போதிலும் அவர்களுக்கு எவ்விதமான கொடுப்பனவுகளும் கிடைப்பதில்லை. அவர்களும் பாடசாலை முடிந்த பின் மேலதிக வகுப்புக்களை செய்கிறார்கள். இந்நிலை காரணமாக இன்று ஆசிரியர்கள் மனமுடைந்துள்ளார்கள்.

பிள்ளையின் தேவையினை பூர்த்தி செய்வது பெற்றோர்களின் கடமை. ஆசிரியர்களின் தேவையினை பூர்த்தி செய்வது அரசாங்கத்தின் கடமை. ஆகவே எங்களுடைய குறைகளை நாங்கள் அரசாங்கத்திற்கு தான் சொல்ல முடியும். உடனடியாக தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் கோரிக்கை விடுத்தார்.

## 1615 மில்லி கிராம் ஹேரோயின் போதைப் பொருளுடன் நால்வர் கைது

**( எப்.முபாரக் )**

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1615 மில்லி கிராம் ஹேரொயின் போதைப் பொருளுடன் நால்வரை மாலை கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஜி.பி.டகம்பத் தெரிவித்தார்.

அக்போபுர, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 32,43,22, மற்றும் 26 வயதுடைய நால்வரே கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு 1615 மில்லி கிராம் ஹேரொயின் போதைப் பொருளை கொண்டு சென்ற போதே அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேக நபர்களை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஜி.பி.டகம்பத் தெரிவித்தார்.

## மனைவியை டீசல் ஊற்றி எரித்த கணவன்

### முல்லைத்தீவில் சம்பவம்

**(அ . அச்சுதன்)**



முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி நகரின் 2ம் பகுதி அன்னிச்சியன்குளம் 5ம் ஒழுங்கையில் வசிக்கும் துஸ்யந்தினி என்ற இளம் குடும்பப் பெண்ணை அவரது கணவரான கனகராசா சயந்தன் என்பவர் டீசல் ஊற்றி எரித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இடம்பெற்ற வாய்தர்க்கம் முற்றியதன் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. ஏரிகாயங்களுக்குள்ளான பெண் தற்போது யாழ்ப்பாணம் வைத்தியாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிசார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## கல்முனை போலிஸாருக்கு சுவ தாரணி



**( ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய கொரோனா தொற்று நோயை மக்கள் மத்தியில் இருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 'சுவ தாரணி' ஆயுர்வேத மருந்து வழங்கும் வேலைத்திட்டம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஊடாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலை திட்டத்தின் ஒரு கட்டமாக நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையினால் பாரம்பரிய ஆயுர்வேத முறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் 'சுவ தாரணி' ஆயுர்வேத பானம் இலவசமாக வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (05.10.2021) கல்முனை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.ஏ.நபீல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஒரு தொகுதி மருந்துகளை கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எச் சுஜித் பிரியந்தவிடம் வழங்கி வைத்தார்.

இதில் பெரும் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெமீல், சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் இந்திக்க உதயங்க, டாக்டர். ஏ.சி.டில்சாத், அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணைப்பாளரும், சிறுவர் மற்றும் இளைஞர்களை பாதுகாக்கும் சமூக ஸ்தாபனத்தின் தலைவருமான பி(ஆ). சர்மில் ஜஹான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆயுர்வேத பானத்தை அருந்தும் முறை பற்றி வைத்திய அதிகாரி பொலிஸாருக்கு தெளிவுபடுத்தியதுடன் பொலிஸ் நிலையத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் கடமையாற்றுபவர்களுக்கும் 'சுவ தாரணி' வழங்கிவைக்கப்பட்டது.

## கல்முனையில் திண்ம, மருத்துவக் கழிவு முகாமைத்துவ மேம்படுத்தலுக்கு ஐ.நா. அபிவிருத்தி நிறுவனம் ஏற்பாடு

**( அஸ்லம் எஸ்.மௌலானா)**

கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையையும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகற்றல் நடவடிக்கையையும் மேம்படுத்துவதற்கான அனுசரணையை வழங்க ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம் (யூ.என்.டி.பி) (UNDP) முன்வந்துள்ளது.

இத்திட்டம் தொடர்பான துறைசார் நிபுணத்துவ ஆலோசனைக் கூட்டம், நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனை மாநகர சபையில், மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் துறைசார் நிபுணர்களான பொறியியலாளர் கலாநிதி ஏ.ஜி.ரி.சுகதபால, பொறியியலாளர் காமினி சேனநாயக்க, பேராசிரியர் பராக்ரம கருணாரட்ன, டொக்டர் எல்.ஜீ.ரி.கம்லத், பொறியியலார் ரஞ்சித் பத்மசிறி, சுற்றுச்சூழல் நிபுணர் சம்பத் ரனசிங்க, யூ.என்.டி.பி. நிறுவனத்தின் கிழக்கு மாகாண திட்ட இணைப்பாளர் ஷாமிர் ஷாலிஹ் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல்.எப்.ரஹ்மான் உள்ளிட்ட வைத்திய அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது குறித்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான விஞ்ஞான, தொழில்நுட்ப பொறிமுறைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் திண்மக் கழிவு மற்றும் மருத்துவக் கழிவு என்பவற்றை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்வதற்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் முன்னோடித் திட்டத்திற்கமைவாக முதற்கட்டமாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலை என்பனவும் அதனோடிணைந்ததாக கல்முனை மாநகர சபை மற்றும் மொனராகல பிரதேச சபை என்பனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245


Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57


Allegrotto Pizza Kurier
Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch
Seela Food Gastro AG
044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch
Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Aaran Ayurveda
& Wellness Massage
Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்
ECDL
Office
Windows 10
தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# மீண்டும் களைகட்டும் பம்பரகிரிஎல்ல சுற்றுலாத்தளம்



(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் இந்தவாரம் நீக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டத்தினையடுத்து, சுற்றுலாத்தளங்களும் படிப்படியாக வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றன.

மாத்தளையில் பிரசித்திபெற்ற பம்பர கிரிஎல்ல நீர்வீழ்ச்சியை நோக்கி சுற்றுலாப்பயணிகள் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக அங்கு செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்தநிலையில் நேற்றுமுதல் மீண்டும் அது திறக்கப்பட்டதாக மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஷ் அறிவித்துள்ளார்.

இயற்கை மனோரம்மியம் நிறைந்த அந்த நீர் வீழ்ச்சிக்கு அருகே தொங்குபாலமொன்று அமைந்திருப்பதும் சுற்றுலாப்பயணிகளைக் கவரும் அம்சமாகும்.

நேற்றுமுன்தினம் அங்கு மாத்தளை மேயர் சந்தனம் பிரகாஸ் மற்றும் காரைதீவு பிரதேசசபைத்தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் மாத்தளை மாநகரசபை உறுப்பினர் ரி.எஸ்.மோகன் உள்ளிட்டோர் அச்சுற்றுலாத்தளத்தை பார்வையிட்டனர். சுற்றுலாப்பயணிகள் மக்கள் அங்கு சென்று நீராடத்தொடங்கியிருக்கின்றனர். தொங்குபாலத்தில் நடந்து குதூகலித்து வருகின்றனர். அப்பகுதியிலுள்ள இயற்கைவனப்புமிக்க இடங்களையும் கண்டுகழித்து வருகின்றனர்.

# சஜித் அணி வைத்தியசாலைகளின் தேவைகள் தொடர்பாக ஆராய்வு

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியுடைய தலைவருமான சஜித் பிரேமதாச வேண்டுகோளுக்கிணங்க அம்பாறை வைத்தியசாலைகளுக்கான அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் வழங்குவது தொடர்பாக அவரது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்களுக்கான இணைப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்தார்.

அவர் கல்முனை ஆதாரவைத்தியசாலை காரைதீவு பிரதேச வைத்தியசாலை திருக்கோவில் ஆதாரவைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கு முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் உடைய வைத்தியஅததியட்சகர் டாக்டர் இரா. முரளீஸ்வரன் காரைதீவு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்புவைத்தியஅதிகாரி டாக்டர் நடராஜா அருந்திரன் திருக்கோவில் வைத்தியசாலையின் வைத்தியஅததியட்சகர் டாக்டர் ஆகியோரை சந்தித்து வைத்தியசாலைகளுக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.



அங்கு இணைப்பாளர் வினோகாந்த் கருத்துரைக்கையில்:

அவர் வெகுவரைவில் குறித்த வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்து இவர்களால் விடுத்த தேவைகளை நிவர்த்தி செய்யவிருக்கிறா.

நாட்டில் இதுவரை இருபத்தி எட்டு வைத்தியசாலைகளுக்கு 8கோடி ருபா (806 லட்சம் ரூபாய்) செலவிலான மருத்துவ உபகரணங்களை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வழங்கி வைத்தார் .கடந்தவாரம் பாணமை மற்றும் பொத்துவில் வைத்தியசாலைகளுக்கு வழங்கிவைக்கப்பட்டது.

தொடர்ந்தும் எனது வேண்டுகோளுக்கிணங்க அம்பாறையில் காணப்படும் தமிழ் பிரதேசங்கள் ஆகிய திருக்கோவில், ஆலையடிவேம்பு ,மல்வத்தை ,நாவிதன்வெளி ,மத்தியமுகாம், காரைதீவு மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களில் காணப்படக்கூடிய வைத்தியசாலைகளுக்கு இது மாதிரியான அத்தியாவசிய வைத்திய உபகரணங்களை எதிர்வரும் நாட்களில் பெற்றுத்தருவதாக உறுதியளித்திருக்கிறார்.

அதற்கான முன்னாயத்தங்களை ஆரம்பிக்கும்படி சஜித் பிரேமதாச என்னிடம் கோரியதற்கமைவாக தற்சமயம் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளுக்கு விஜயம் செய்துவருகின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியினுடைய தலைவருமாகிய சஜித் பிரேமதாச இந்த நாட்டையும் இந்த நாட்டு மக்களையும் குறிப்பாக இன்னல் காலங்களிலே அவர்களுக்கு கைகொடுக்கும் ஒரு சிறந்த தலைவர் என்பது அவருடைய சேவைகளிலிருந்து கண்டிப்பாக மக்களுக்கு புரிகிறது.என்றார்.

இச்சந்தர்ப்பத்திலே சமுகசெயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜாவும் சமுகமளித்திருந்தார்.

# காரைதீவில் உலருணவு விநியோகம்



கொரோனாத்தொற்று காரணமாக காரைதீவுப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

பிரபல சமுகசெயற்பாட்டாளரும் காரைதீவு பிரதேசசபைத்தவிசளாருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறிலின் ஏற்பாட்டில் இவ் உலருணவு நிவாரணம் காரைதீவு 8 ஆம் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டபோது.

படங்கள் : வி.ரி.சகாதேவராஜா

# மூடப்பட்ட காரைதீவு ச.தொ.ச. மீண்டும் திறக்கப்படுமா?

(வி.ரி.சகாதேவராஜா)

மூடப்பட்ட காரைதீவு ச.தொ.ச.மீண்டும் திறக்கப்படுமா? என்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

கடந்தகாலங்களில் இயங்கிவந்த காரைதீவு ச.தொ.ச விற்பனைநிலையம் கடந்த வருடம் மூடப்பட்டதனால் இப்பிரதேச மக்கள் அரசு அறிவிக்கும் நிவாரண விலைகளில் பொருட்கள் எதனையும் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

கோவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் ச.தொ.ச. விற்பனை நிலையங்களின் சேவை மிகவும் அத்தியாவசியமானது.

ஏற்கனவே காரைதீவு ச.தொ.ச. கிளை மூடப்பட்டதால் மேற்குறிப்பிட்ட மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

எனவே ச.தொ.ச. காரைதீவுக் கிளையை மீண்டும் திறக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது காரைதீவு நிந்தவூர் பிரதேசங்களில் ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நுளம்பின் தாக்கம் எதிர்வரும் காலத்தில் அதிகரிக்கலாம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது இயல்பு நிலைகானப்படுகின்ற போதிலும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டியுள்ளது இனிவரும் காலங்களில் மழையுடன் கூடிய காலநிலையினை எதிர்கொள்ளும் பொது நோய்தாக்கங்கள் அதிகரிக்கும் வாய்ப்பும் உள்ளது.

டெங்கு நோய் பரவுவதை மக்களின் சுகாதாரமான பழக்கவழக்கங்கள் ஊடாக கட்டுப்படுத்துவதற்கு ஒத்துளைப்பு வழங்குவதன் மூலம் டெங்கு நோய்தாக்கத்தினை கட்டுப்படுத்த முடியும்.

அரசும் சுகாதார திணைக்களத்தினரும் டெங்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். நீர் தேங்கிகானப்படும் இடங்களை வீடுகளில் கன்டால் உடணடியாக துப்பரவு செய்து நீர் தங்காத வகையில் சரிசெய்துகொள்ளவேண்டும் வீடுகளில் வசிக்கும் குழந்தைகள் வயோதிபர்கள் மற்றும் ஏனையோரின் பாதுகாப்பு கருதி வீட்டு சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் வேண்டுகொள் விடுக்கின்றனர்.

நீண்ட நாட்களாக இயங்காமல் இருந்த அலுவலகங்கள் பாடசாலைகள் வணக்க;தலங்கள் பொதுச்சந்தைகள் பொது இடங்கள் அனைத்தும் துப்பரவுக்குட்படுத்திய பின்னரே மக்கள் பாவனைக்கு உட்படுத்துவதற்கு பொது சுகாதார பரீசோதகர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடிக்கடி பெய்து வருகின்ற மழையினால் நீர் தேங்கி டெங்கு நுலம்புகள் பெருகும் அபாயம் கானப்படுவதினால் மக்கள் அவதானத்துடன் செயற்படுவது மிகமிக அவசியமாகும்.

கொரோனா நோய்தாக்கம் தனிந்துள்ள போதிலும் மக்கள் அவதானத்துடன் செயல்படுதல் மற்றும் சுகாதார திணைக்களத்தினரின் அறிவுத்தல்களின் படி நாம் நடந்துகொள்ளவேண்டும் இன்றும் மொரு ஆபத்தான நிலையினை நாம் உருவாக்கவே ஏதிர்கொள்ளவோ கூடாது என்பதற்காக நாம் அவதானத்துடன் செயற்படுவதன் மூலம் நோய் அற்றவாழ்கையை வாழமுடிம்.

# தென்னம் தோப்பினுள் நுழைந்த யானைக் கூட்டம் பயன்தரு தென்னம் பிள்ளைகளை துவம்சம்

(வி.சுகிர்தகுமார்)

அம்பாரை மாவட்டம் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்னப்பனங்காடு மற்றும் இத்தியடி பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்பு பகுதிகள் மற்றும் தென்னம் தோப்பினுள் நேற்றிரவு நுழைந்த யானைக் கூட்டம் பயன்தரு தென்னம் பிள்ளைகளை துவம்சம் செய்துள்ளதுடன் வாழை உள்ளிட்ட பயிர்களையும் நாசம் செய்துள்ளது.

நேற்றிரவு தென்னம் தோப்பு மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்நுழைந்த யானைகளை விரட்டுவதற்காக அங்குள்ள பலர் முயற்சித்தபோதும் அது கைகூடாமல் போயுள்ளது. மாறாக யானைகள் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கவே முயற்சித்துள்ளது.

இதனால் கவலையடைந்துள்ள தென்னம் தோப்பின் உரிமையாளர்கள் முயற்சியை கைவிட்ட நிலையில் யானைகளால் தென்னங்கன்றுகள் பிடிங்கி எறியப்பட்டதுடன் சில தென்னங்கன்றுகளின் குருத்துக்களையும் இழுத்துச் சென்றுள்ளது.



இந்த நிலையில் அரசாங்கம் தமக்கான தீர்வினை பெற்றுத்தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இல்லையேல் தங்களது வாழ்வாதாரமாக இருக்கும் தென்னம் தோப்பினையும் பயிர்ச்செய்கையினையும் கைவிட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகும் எனவும் குறிப்பிட்டனர்.

இதுபோன்ற தென்னம் தோப்பினை உருவாக்க குறைந்தது 10வருடங்களாவது தேவைப்படும் எனவும் கவலையுடன் தங்களது கருத்துக்களை பதிவு செய்தனர்.

ஆகவே பொது மக்கள் மீது அதிக கரிசனை காட்டும் அரசாங்கமும் சம்மந்தப்பட்டவர்களும் உடன் தலையீடு செய்து மின்சார வேலியினை அமைத்து தென்னம் தோப்பினை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த பகுதிக்கு மின்சாரத்தை வழங்கி ஒளியூட்டி மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தில் தொடர்ந்தும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் அங்குவாழும் மக்கள் நாளாந்தம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருவதுடன் குறித்த பகுதியை விட்டு வெளியேற வேண்டிய நிலை உருவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் சாகாமம் பகுதியில் மின்னல் தாக்கி விவசாயி மரணம்

(திருக்கோவில் நிருபர் )

அம்பாரை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட சாகாமம் வயல் வெளியில் மின்னல் தாக்கி 52 வயதுடைய விவசாயி ஒருவர் பரிதாபகரமாக பலியாகி இருப்பதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ் அனர்த்தமானது திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை சாகாமம் பெரியதலாவை வயல் பிரதேசத்தில் இடம்பெற்று இருந்தன.

இவ் சம்பவம் தொடர்பாக பொலிசாரின ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவருவது யாதெனில் தனது வீட்டில் இருந்து நேற்று வயல் வேலைக்காக சென்று இருந்த நிலையில் குறிந்த நபர் வீடு திரும்பாத நிலையில் வீட்டார் தேடிய வேளை வயலில் இறந்து கிடந்ததை உறவினர்கள் இன்று செவ்வாக்கிழமை காலை அவதானித்துள்ளனர்

இதனைத் தொடர்ந்து அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத் அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த திருக்கோவில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து இருந்தனர்.

இவ்வாறு மின்னல் தாக்கி மரணமடைந்ததாக தெரிவிக்கப்படும் விவசாயி சாகாமம் பாடசாலை வீதியைச் சேர்ந்த 52வயதுடைய 6பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து மோகனராசா என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இவ் மரணம் தொடர்பான சட்டரீதியான மேலதிக விவசாரணைகளை திருக்கோவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னாரில் மீன்பிடி வளாகம் அமைக்க பேச்சுவார்த்தை ஆரம்பம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி வளாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என நீண்ட காலமாக இங்குள்ள கல்விமான்களாலும் அரசியல் வாதிகளாலும் விடுக்கப்பட்டு வரும் கோரிக்கை தற்பொழுது ஆரம்ப கட்ட முன்னெடுப்புக்கள் ஆரம்பமாகியிருப்பது தெரியவந்துள்ளது.

அதாவது மன்னார் மாவட்டத்தில் பெருபாண்மையான மக்களாக மீனவ சமூகம் காணப்படுகின்றது. இதனால் இவ் மாவட்டத்தில் மீன்பிடி வளாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என நீண்டகாலமாக இங்குள்ள கல்விமான்களாலும் அரசியல் வாதிகளாலும் அரசாங்கத்திடம் நீண்டகால கோரிக்கையாக இருந்து வந்தது.

இந்த நிலையில் அன்மையில் ஆரம்பமான வவுனியா பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து இவ் கோரிக்கைகள் தற்பொழுது கவனத்துக்கு எடுக்கப்பட்ட நிலையில் மீன்பிடி வளாத்தினை மன்னார் மாவட்டத்தில் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் திங்கள் கிழமை (04.10.2021) காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.



இவ் கலந்துரையாடலில் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல், மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோர் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வாழ் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்

## அவுஸ்திரேலியாவில் கல்வித் தகைமையுடன் கூடிய பகுதி நேர வேலைவாய்ப்பு!!



UNSW Global

## Are you after O/Levels?

Start your Journey to a World TOP 50 University in Australia from Sri Lanka

Apply now

## UNSW FOUNDATION STUDIES

Contact us to start your journey

Lavanya:
077 489 8773
lavanya.k@aibt.education

AIBT CAMPUS

சாதாரண தரத்தில் (O/L ) சித்தி அடைந்த 24 வயதுக்கு உட்பட்டவர்கள் மற்றும் 25 - 35 வயதிற்கு உட்பட்ட (Mature Students) பொருத்தமான ஆரம்பக் கட்ட கல்வித்தகமை உடையவர்களுக்கு, இதோ உலகின் 44 ஆவது இடத்தில் உயரிய கல்வித்தரத்தில் திகழும் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமான The University of New South Wales Global, Sydney, Australia (https://www.unswglobal.unsw.edu.au/) தனது Foundation studies கற்கையை எம் மாணவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவுஸ்திரேலியா நாட்டில் பொருத்தமான பகுதிநேர வேலை வாய்ப்புடன் மேற்படிப்பையும் தொடரக் கூடிய அருமையான வாய்ப்பையும் வழங்குகிறது . இப்பாட நெறியினை கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள AIBT(Asian Institute of Business and Technologyd https://aibt.education/ ) கல்விக் கூடத்தில் மாத்திரமே கற்பிக்க அவுஸ்திரேலிய பல்கலைக்கழகமானது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அனுமதி கொடுத்துள்ளது.

**அக்டோபர் 5ஆம் திகதி**
பாடகக் கற்கை ஆரம்பிக்கப்படவுள்ளது

# "GRAB YOUR OPPORTUNITY"

## Are you exploring opportunities for world class education with an Australian University?

The UNSW Global (https://www.unswglobal.unsw.edu.au/) offers an exciting opportunity for you through AIBT Campus (Asian Institute of Business and Technology- https://aibt.education/ ) in Colombo and Kandy providing students a dedicated pathway to achieve their university dreams in Australia to study at University of New South Wales ,Sydney, a top rank work class university .

AIBT will deliver the UNSW Global Foundation Studies Program to students at its campuses in Colombo and Kandy.

For more information, please Call Ms. Lavanya on 077 4898 773 for the course commencing Oct 5th ,2021

## சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்!!! விண்ணப்பிக்க முந்துங்கள்!!

**மேலதிக விபரங்களை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற்றுக் கொள்ள அழைக்கவும் Ms.Lavanya - 077 4898 773**




# அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம்



**அ.அச்சுதன்**

திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள தலைமையில் நடைபெற்றது .

தற்போது நிலவக்கூடிய மொன்சூன் பருவக்காற்று நிலைமை காரணமாக மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய முன் ஆயத்த நடவடிக்கைகள் பற்றி இக்கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர் தலைமையில் அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பிரதேச செயலக ரீதியாக உத்தியோகத்தர்களும் ஏற்படக்கூடிய அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

மக்கள் இது தொடர்பில் கூடிய அவதானத்துடன் செயற்படல் மிக முக்கியமானது. மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி அதிகார சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற வடிகான்களை தூய்மைப்படுத்துவது மிக இன்றியமையாததாக காணப்படுகின்றது.

சில பிரதேசங்களில் வடிகான்கள் மூடப்பட்டு காணப்படுவதன் காரணமாக மழையினால் வெள்ளப்பெருக்கு அதிகமாக ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. எனவே உள்ளூர் அதிகார சபை நிறுவனங்கள் வடிகாண்களை துப்பரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் ஏனைய நிறுவனங்களும் தங்களுடைய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று இதன்போது அரசாங்க அதிபர் உரிய அதிகாரிகளிடம் வேண்டிக்கொண்டார்.

மாவட்டத்தில் இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முப்படை மற்றும் பொலிஸ் மற்றும் ஏனைய நிறுவனங்களை இணைத்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக இருப்பதாக இதன்போது அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பி.ஆர்.ஜயரத்ன, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ், பிரதேச செயலாளர்கள், முப்படை, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# பெரிய கல்லாறு பொது மைதானத்தினுள் கடினபந்து விளையாடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தம்

**(ரக்ஸனா)**

பெரிய கல்லாறு பொது மைதானத்தினுள் கடினபந்து விளையாடுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞானமுத்து யோகநாதன் தமக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக பெரியகல்லாற்றில் அமைந்துள்ள விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகம், கல்லாறு விளையாட்டு கழகம், ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஒலிம்பியா விளையாட்டுக் கழகம் வலம்புரி விளையாட்டுக் கழகம், John de Britto Sports Club, Spider Sports Club Butterfly Sports Club, ஆகியோருக்கு இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது மேற்படி விடயம் தொடர்பாக பெரியகல்லாறு பொது மக்கள் மற்றும் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை ஆகியோரால் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவும், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தரின் அறிக்கைக்கு அமைவாகவும், 23.09.2021ஆம் திகதி நடைபெற்ற எமது சபைக்கூட்டத்தில் இது விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் குறித்த பிரச்சனைக்கு பின்வரும் தீர்வு வழங்கப்படுகின்றது என்பதனை அறியத்தருகிறேன்.

மைதானத்தின் அளவு குறைவாக காணப்படுவதனால் மைதானத்தின் மத்தியில் கடினபந்து விளையாடுவதை தற்காலிகமாக இடைநிறுத்தும்படி தெரிவிப்பதுடன் வலைக் கூட்டுக்குள் பயிற்சியில் ஈடுபடலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன். என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள், உள்ளூராட்சி ஆணையாளர் கிழக்கு மாகாணம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மட்டக்களப்பு, பிரதேச செயலாளர், மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி, ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை, கல்லாறு, விளையாட்டு உத்தியோகத்தர் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம், அபிவிருத்தி உத்தியோகத்தர் (இந்து கலாச்சாரம்), மண்முனை தென் எருவில் பற்று, த.புவனேந்திரராசா, பொது மைதான வீதி, கல்லாறு ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் தாம் இந்த மைதானத்தில் மிக நீண்டகாலமாகவிருந்து கடினபந்து விளையாடி வருவதை தற்போது தடைசெய்யப்பட்டுள்ளமை தமக்கு மிகுந்த வேதனையளிப்பதாகவும், இது தமது விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக அமைந்துள்ளதாகவும், பெரியகல்லாறு கிராமத்தில் அமைந்துள்ள விளையாட்டுக் கழகத்தினர் தெரிவிக்கின்றனர்.

# திருமலை கப்பற்துறை பகுதி விவசாய நிலப் பிரச்சினைக்கு தீர்வு

**(இஃஜாஸ் ஏ பரீட்)**

திருகோணமலை , கப்பற்துறை சராதாபுர, விவசாயிகளின் நீண்டகால விவசாய நிலங்களின் பிரச்சினை தீர்வு காணப்பட்டுள்ளது.

இந் நிலங்கள் சட்டரீதியாக தீர்க்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் , மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான கபில நுவான் அத்துகோரள தெரிவித்தார்.

இந்த பகுதியில் உள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை அவர்களது கோரிக்கைக்கிணங்க பாராளுமன்றத்தில் உரையாற்றி சபாநாயகரிடம் இந்த பிரச்சினைகளை தாகாகல் செய்ததன் விளைவாகவும்,மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் திருகோணமலை வருகையின் போது கேட்டுக் கொண்டதன் விளைவாக திருகோணமலை மாவட்டத்தில், இந்த விவசாய நிலங்களை விடுவிப்பது மிக விரைவில் இடம் பெற்றுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரள தெரிவித்தார்.



திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்ஷனா பண்டிக் கோரள மற்றும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் இந்த விவசாய நிலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சட்டரீதியாக மக்களிடம் ஒப்படைப்பதற்கும் சிறப்பு தலையீடு செய்துள்ளதை தான் பாராட்டுவதாகவும் இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# மலசலகூட வசதி அற்ற 26 குடும்பங்களுக்கான மலசல கூடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நிகழ்வு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கிண்ணியா பிரதேச செயலகப்பிரிவில் மலசலகூட வசதி அற்ற 26 குடும்பங்களுக்கான மலசல கூடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான சமன் தர்சன பாண்டி கோராளவின் தலைமையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மலசல கூட வசதியற்ற 8000க்கு மேற்பட்ட குடும்பங்கள் இருப்பதாகவும் அரசாங்கம் கட்டம் கட்டமாக மக்களுடைய குறித்த தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. இருப்பினும் அரசாங்கத்துடன் இணைந்து அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களுடைய குறித்த வசதிகளை மேம்படுத்தி கொடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.

அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்தி கிராமிய மக்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்திலும் இச்செயற்றிட்டங்கள் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது இதனுடைய மூல நோக்கமாக காணப்படுகின்றது. மாவட்டத்தினுடைய உற்பத்தி செயற்பாட்டை அதிகரிப்பதன் மூலம் மாவட்டத்திற்கு தேவையான உணவு உற்பத்தியைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் மேலதிக உற்பத்தியை ஏனைய மாவட்டங்களுக்கு விநியோகிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.



கொவிட்டுக்கு மத்தியிலும் அரசாங்கம் மக்களுடைய வாழ்வாதார செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டது. நாட்டினுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் அனைவரும் கைகோர்த்து செயற்படல் அர்ப்பணிப்புடன் செயற்படல் வேண்டும். தற்பொழுது தனிமைப்படுத்தல் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் சுகாதார நடைமுறைகளை பேணி செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். இதன் மூலம் நாட்டினுடைய பொருளாதாரத்தை வலுப்படுத்த கூடியதாக அமையும் என்று இதன்போது அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் வாழும் பிரதேசமாக காணப்படுகின்றது. அந்த பிரதேச மக்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது. அரசாங்கம் வழங்கும் உதவிகளுக்கு மேலதிகமாக அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை பெற்றுக் கொண்டு மக்களுடைய வாழ்வாதார, உட்கட்டமைப்பு வசதிகளை கிரமமாக நிவர்த்தி செய்து வருவதாக இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் தெரிவித்தார் எம். ஏ.அனஸ் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கும் இதன்போது உலர் உணவுப் பொதிகள் மாவட்ட அரசாங்க அதிபரினால் வழங்கிவைக்கப்பட்டது.

இவ்விரு நிகழ்வுகளுக்குமான அனுசரணையை குயுனூதிடினஞ் டதட்ச்ண்டி ணுது ஹுணிதணஞீச்ணூடிணிண வழங்கியமை குறிப்பிடத்தக்கது .

இதில் கிண்ணியா உதவி பிரதேச செயலாளர் பாஹிமா, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நிஸ்வி, நிறுவன உத்தியோகத்தர்கள் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# கன்னன்குடா துறையடி உள்வீதி பிரதேச செயலாளரிடம் கையளிப்பு

**(ரக்ஸனா)**



ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் ஜனதாக்ஸன் நிறுவனத்தின் அனுசரணையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை ஊடாக வவுணதீவுப் பிரதேசத்தின் கன்னன்குடாகிராமத்தில் அக்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன்துறையடி உள்வீதிக்கு கிறவல் இட்டு செப்பனிடப்பட்டு அதனைபிரதேசசெயலாளரிடம் உத்தியோக பூர்வமாக திங்கட்கிழமை கையளிக்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளை பொருளாளர் வ.சக்திவேல் இத்திட்டத்தை உத்தியோக பூர்வமாக மண்முனைமேற்குபிரதேசசெயலாளர் எஸ்.சுதாகரனிடம் கையளித்தார்.

இதன்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா, கிளை நிறைவேற்று உத்தியோகஸ்த்தர் திருமதி பி.வேணுஷா, திட்டத்திற்குப் பொறுப்பான திட்ட உத்தியோகஸ்த்தர் எஸ்.ருத்திராஜ், மற்றும் கிளை உத்தியோகஸ்த்தர் க.விஸ்வநாத், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# விசேட தேவையுடைய குடும்பம் ஒன்றுக்கு நிரந்தர வீடு வழங்கி வைப்பு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

வெருகல் பிரதேச செயலாளர் எம்.எச். ஹனி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வாழ்வதற்கான இல்லறம் எனும் செயற்றிட்டத்தின் கீழ் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் அனுசரணையில் மக்கள் சேவை மன்றத்தினால் திருகோணமலை வெருகல் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பரஞ்சோதி எனும் விசேட தேவையுடைய குடும்பத்திற்கு நிரந்தர வீடு நிர்மாணித்து அவற்றினை கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை மன்றத்தின் தலைவர் எம்.ரீ.எம். பாரிஸ் மற்றும் வெருகல் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயக்குமார் உதயவேந்தன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

வன்னி ஹோப் நிறுவனத்தினால் வீடுகள் இன்றி ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இன,மத வேறுபாடின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நலன்விரும்பிகள், வெளிநாட்டு கொடை நிறுவனங்கள் போன்றவர்களின் ஆதரவுடன் வன்னி ஹோப் நிறுவனத்தினல் இது போன்ற திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

அந்த அடிப்படையில் மேற்குறித்த வீடு நிர்மாணிப்புக்காக அவுஸ்ரேலியாவில் உள்ள தேவ் மற்றும் லலிதா மகாதேவன் குடும்பத்தார் நிதி உதவியுடன் அவர்களுடைய தாயாரான காலஞ்சென்ற பூரணம் காந்தி விஜயரத்ணம் அவர்களின் நினைவாக இந்த வீடு நிர்மாணித்து வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversichenungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு
துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள்
உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள்
மற்றும் ஆவணங்களை துரித
வேகத்தில் உரிய முகவரியில்
கொண்டு சேர்க்க
இன்றே நாடுங்கள்
TA parcel.lk
LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி

GRÜNAU 1
# ITALY # INDIAN # THAI # SRILANKA
Fruhstuck / Mittagessen / Abendessen
Öffnungszeiten
Montag - Sonntag
08:00AM - 22:00PM
ORDER NOW
TANDOORI
FISH SPL
BBQ GRILL
BIRIYANI SPL
CURRY GERICHTE
MIX SABJI DESERTSLIEF
CALL for FREE DELIVERY
044 260 2222 079 563 2222
Meierwissenstr 58, 8064 Zürich
www.grunau1restaurant.com

# வீரேந்திரன் சரவணமுத்துவும், கூடைப்பந்தாட்டத்தில் சாதனையும்

விரேன் என்று சகலராலும் அறியப்பட்ட இவர் தனது ஆசிரியத் தொழிலில் இன்றுடன் 60 வது வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுகின்றார். ஓர் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் விளையாட்டின் மேலுள்ள ஆர்வத்தால் விளையாட்டுத்துறையில் பயிற்சி பெற்ற ஆசிரியராக சேவையாற்றினார்.

காலஞ்சென்ற அருட்தந்தை ஹேபயர் அவர்களின் மாணவராக கூடைப்பந்தாட்டத்தை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் ஆரம்பித்த இவர், மாணவப் பருவத்தில் 15 வயது, 17 வயது,19 வயதுப் பிரிவுகளுக்காக விளையாடி தேசிய மட்டத்தில் மட்டும் 6 தடவைகள் தங்கப் பதக்கத்தினையும், ஒருதடவை வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுள்ளார். இதைத்தவிர ஏனைய பிற மட்டங்களிலும், கழகங்களுக்காகவும் விளையாடி நூற்றுக் கணக்கான விருதுகளைப் பெற்றுள்ளார். தான் ஆசிரியராக வருமுன்னர் நான்கு வருடங்கள் மகாராஜா நிறுவனத்தில் கடமையாற்றும்போது மேக்கன்ரையில் கிண்ணத்துக்காக விளையாடி அந் நிறுவனத்திற்கு பல விருதுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.



புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும்போது. மாணவர்களை சிறப்பாகப் பயிற்றுவித்து தேசிய மட்டத்தில் மட்டும் 52 விருதுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளார். இது மிகப் பெரிய சாதனையாகும். இதைவிட வேறு விருதுகள் பலவுண்டு. இவரால் பயிற்றுவிக்கப்பட்ட பல மாணவர்கள் ஏறக்குறைய 15 க்கு மேற்பட்டவர்கள் தேசிய கூடைப் பந்தாட்டக்குழுவில் இடம் பெற்றுள்ளனர் என்பது இவரது திறமைக்கு மிகப் பெரிய சான்றாகும்.

1980 1982 ஆண்டு காலப் பகுதியில் இலங்கை தேசியக் கூடைப் பந்தாட்டக் குழுவில் இடம் பெற்று இந்தியாவுக்குச் சென்றுள்ளார் அங்கே Best outstanding player ஆகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற ஆசியக் கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான இலங்கைக் குழுவிற்கு பயிற்றுநராக நியமிக்கப்பட்டு அங்கு சென்றுள்ளார்.

2005ம் ஆண்டு கொரியாவில் இடம்பெற்ற கூடைப் பந்தாட்டப் போட்டிகளில் கல்லூரி அணிக்கான



பயிற்றுனராகச் சென்றுள்ளார் அங்கு விருதுகள் பெறமுடியாவிட்டாலும் மிச்சிறந்த ஒழுக்கமுடைய குழுவிற்கான விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

கடைசிக்காலத்தில் தன்னை ஒரு இருமொழி (bilingual) ஆசிரியராக மாற்றிக்கொண்டு சுகாதாரப் பாடத்தினை ஆங்கில மொழியில் கற்பிக்கும் சிறந்த ஆசிரியராக சேவையாற்றி மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். அங்கு ஆசிரியர்களால் சிறந்த கௌரவிப்பு நிகழ்வு ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இவரைப்பற்றி எழுதுவது என்றால் ஒரு புத்தகமே எழுதிவிடலாம் மேலுள்ளவை எல்லாம் தேசிய மட்டச் சாதனைகள் மட்டுமே. இவரது சேவை மேலும் தொடர வேண்டும். ஓய்வுகாலத்தில் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்தி இறை ஆசி வேண்டிநிற்கின்றேன்.

**கணபதிப்பிள்ளை பாஸ்கரன்**
**முன்னாள் கல்விப்பணிப்பாளர்**
**மட்டக்களப்பு**

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் இடம்பெற்ற விமான சுற்றுலா!!





**கல்லடி நிருபர்**

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம் மட்டக்களப்பு நகரில் விசேட விமான சுற்றுலா ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியிருந்தது.

இது தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் எ.எம்.ஜௌபர் மேற்கொண்டிருந்தார்,

சுற்றுலாத்துறையினை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுலா விமான சேவைகள் அமைச்சின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வினை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருனாகரன் பிரதம அதிதியாக கலந்தது கொண்டு ஆரம்பித்துவைத்தார்.

கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் ஹரிப்பிரதாப், வர்த்தக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கே.எஸ்.தாசன், மட்டக்களப்பு சுற்றுலா அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் என்.எ.நிறோசான் மற்றும் 231 ஆவது படைப்பிரிவின் கேணல் டிலூப பண்டார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தற்போதைய கொவிட் சூழ்நிலையில் முடங்கிய நிலையில் இருக்கும் மக்களை சுற்றுலாத்துயின் ஊடாக மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கு மற்றும் சுற்றுலா துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையிலேயே இந்த ''ஜாய் டிரைவ் விமான சுற்றுலா மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் அதிகளவிலான உள்ளூர் சுற்றுலாப்பயணிகள் விசேட விமான சுற்றுலாவில் பயணித்ததுடன், மகிழ்ச்சியையும் தெரிவித்திருந்தனர்.

இன்றைய விமான சுற்றுலாவானது மட்டக்களப்பு விமான நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஏறாவூர் வழியாக பாசிக்குடா வரை சென்று காத்தான்குடி வரை பயணித்து விமான நிலையத்தை வந்தடைந்ததுடன், வாராந்தம் இச்சுற்றுலா பயணத்தினை நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# க.பொ.த. பரீட்சையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் தேசிய மட்டத்தில் கடந்த முறையைவிட இம்முறை 9 இடங்களை பின்தள்ளி 33 ஆம் இடத்திற்கு முன்னேற்றம்

**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின்படி மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் தேசிய மட்டத்தில் கடந்த முறையைவிட இம்முறை 9 இடங்களை பின்தள்ளி 33 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.



இந்த வலயம் கடந்த முறை 42 ஆம் இடத்தில் இருந்தது.

இதேவேளை மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர்க் கல்விக் கோட்டத்தில் %9 தசம் 58 வீதமான மாணவர்கள் உயர் தரம் படிக்க தகுதியடைந்துள்ளதனால் இக்கோட்டம் வலயத்தில் முதலிடம் பிடித்துள்ளது. இங்கு பரீட்சைக்குத் தோற்றிய 528 மாணவர்களில் 421 பேர் தகுதிபெற்றுள்ளனர்.

இவ்வலயத்தின் காத்தான்குடி கோட்ட பாடசாலைகளிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 940 மாணவர்களில் 713 பேர் தகுதியடைந்துள்ளனர். இது 75 தசம் 69 வீதமாகும். கோறளைப் பற்று மேற்கு கோட்டத்தில் 74 தசம் 86 வீதமான மாணவர்களே உயர்தரத்திற்குத் தகுபெற்றுள்ளனர். இக்கோட்ட பாடசாலைகளிலிருந்து தோற்றிய 69% மாணவர்களில் 52% பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் 2018 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 57ஆம் இடத்திலிருந்து 2019 இல் 42ஆம் ஸ்தானத்திற்கு வந்தது. இம்முறை 32 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் கபொத சாதாரண தர வகுப்புக்களைக்கொண்ட 32 பாடசாலைகள் இருக்கின்றன.

# பனங்காடு வைத்திய சாலையில் இரவு நேர கடமைக்கு வைத்தியர் இன்மை நோயாளர்கள் அசௌகரியம்

**(செல்வி வினாயகமூர்த்தி)**

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் இரவு வேளையில் கடமைக்கு வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற பின்தங்கிய அதிகஷ்டப் பிரதேசங்களில் வாழ்கின்ற ஏழைமக்களுக்கு பிரதான உயிர்நாடியாக பனங்காடு பிரதேசவைத்தியசாலை விளங்குகின்றது.

மத்திய மருந்தகமாக இருந்து 2006ம் ஆண்டு குறித்த வைத்தியசாலை பிரதேசவைத்திய சாலையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக ஒரு ஆரம்ப வைத்தியசாலையாகவே இயங்கி வந்துள்ளது. இந்நிலையில் பலரின் அர்ப்பணிப்புள்ள முயற்சியால் 2008 ம் ஆண்டு பிரசவ கூடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. 10க்கு மேற்பட்ட பிரசவங்களும் இவ் வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளதுடன் இப்பிரதேசத்துக்கென முன்மாதிரியான வைத்திய சாலையாகவும் திகழ்ந்துள்ளது. இருப்பினும் கடந்த பல வருடங்களாக இவ் வைத்தியசாலையில் இரவு நேரகடமையில் ஒரு வைத்தியர் இல்லாமை நீண்டகால குறைபாடாக நிலவிவருகின்றது.

24 மணிநேர அவசரசிகிச்சைப்பிரிவுடன் அண்மைக்காலமாக ஒரு பிரதேச வைத்தியசாலையாக இயங்கத்தொடங்கிய போதிலும் இரவு நேரகடமையில் வைத்தியசாலை வளாகத்தில் வைத்தியர் இல்லாமையால் தூரகிராமங்களில் இருந்து அவசர சிகிச்சைக்காக இவ் வைத்தியசாலை நோக்கி வரும் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் நகரப்பகுதியிலுள்ள வைத்தியசாலையில் பெரும் சிரமங்களின் மத்தியில் அனுமதிக்கப்படுகினர்.

இக்குறைபாடு தொடர்பில் பனங்காடு பிரதேச வைத்தியசாலை அபிவிருந்தி சங்கம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை பலதடவை அணுகி குறைபாடு தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் இதுவரையில் தீர்வின்றி இவ் அவல நிலை தொடர்வதாக தெரிவிக்கின்றனர்.

# ஊடகவியலாளர் ஒன்றியத்தின் போதுக்கூட்டமும் அடையாள அட்டை,மேலங்கி வழங்கும் நிகழ்வு



**(எப்.முபாரக்)**

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் அடையாள அட்டை மற்றும் மேலங்கி வழங்கும் நிகழ்வு கந்தளாய் நகர மண்டபத்தில் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கங்கத்தலாவ ஊடகவியலாளர் ஒன்றியத்தின் மேம்பாட்டிற்காகவும் வளர்ச்சிக்காகவும் நிர்வாக கூட்டங்களில் பேசப்பட்ட விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர் விட்டதவறுகளை எமது சங்கம் விடக்கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது.

இதன் போது ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வ டிசேட்டும், அடையாள அட்டையும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் தகவல் உத்தியோகத்தர் திரு.ரசினும் கலந்து கொண்டார்.

# அக்போபுரவில் ஹேரோயினுடன் நால்வர் கைது

**( எப்.முபாரக் )**

திருகோணமலை அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1615 மில்லி கிராம் ஹேறொயின் போதைப் பொருளுடன் நால்வரை நேற்று கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஜி.பி.டகம்பத் தெரிவித்தார்.

அக்போபுர, திருகோணமலை பகுதியைச் சேர்ந்த 32,43,22, மற்றும் 26 வயதுடைய நால்வரே கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு 1615 மில்லி கிராம் ஹேறொயின் போதைப் பொருளை கொண்டு சென்ற போதே அக்போபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைது செய்துள்ளதாக அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேக நபர்களை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் அக்போபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.ஜி.பி.டகம்பத் தெரிவித்தார்.

# மன்னாரில் திங்கள் கிழமை ஒன்பது பேருக்கு கோரோனா தோற்று உறுதி செய்யப்பட்டுள்ளது

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னாரில் திங்கள் கிழமை மேலும் ஒன்பது பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2147 ஆக உயர்ந்துள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நாளந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் கொரோனா தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் திங்கள் கிழமை அன்றைய தின அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

திங்கள் கிழமை (04) மன்னார் மாவட்டத்தில் 09 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும்

இவர்களில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவரும், வங்காலை மாவட்ட வைத்தியசாலையில் 02 நபர்களும், சிலாவத்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒருவரும், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 நபர்கள் ஆகிய இடங்களிலேயே இவ் தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இதைத் தொடர்ந்து இந்த மாதம் (ஒக்டோபர்) கொரோனா தொற்றாளர்கள் 27 ஆக உயர்ந்துள்ளது. இந்த மாதம் 60 பேருக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் இதுவரை 29022 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர். பரிசோதனையில் 2147 நபர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா முதலாவது தடுப்பூசி 79312 நபர்களுக்கும். இரண்டாவது தடுப்பூசி 59776 பேருக்கும் இதுவரை ஏற்றப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிக்கை இவ்வாறு தெரிவித்துள்ளது.





# எழுத்தறிவு போதிக்கும் கரங்களே நாட்டின் எதிர்கால அரண்கள்

**செல்வி விநாயகமூர்த்தி**

கற்பித்தல் என்பது உலகில் செல்வாக்கு செலுத்தும் ஓர் பணி.உலகில் அக்டோபர் 06 ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகின்றது.'எங்கே நடப்படுகிறாயோ,அங்கயே விதையாகு' என்பது பொன்மொழியாகும்.ஒரு நாட்டின் சிறந்த கல்வியாளரை கௌரவிக்க அல்லது அந்த நாட்டில் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை கொண்டாட அந்தந்த நாடுகளில் ஆசிரியர் நாள் வெவ்வேறு திகதிகளில் கொண்டாடப்பட்டாலும் 1994ம் ஆண்டிலிருந்து இலங்கையில் அக்டோபர் 06ல் எமக்கு மகத்தான வாழ்வை வாழ வழியமைத்துக்கொடுத்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவிப்பதற்காக ஆசிரியர் நாளாக கொண்டாடப்படுகிறது.

ஆசிரியரை பாராட்டும் நாளான இன்றைய நாளை கடந்த ஆண்டினைப்போல் சிறப்புற கொண்டா முடியாத சூழ்நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.கொரோனா தொற்று காரணமாக ஏறத்தாள 06 மாதங்களாக பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். ஆனாலும் எம் வாழ்வில் வழிகாட்டியாக நின்றவர்களை அவர்களுக்கான நாளில் பாராட்டாமல் இருந்துவிட முடியாது.

ஆசிரியர்கள் மனித வரலாற்றில் பிரிக்கமுடியாத மனித சமுதாயத்தின் அச்சாணியாக விளங்குவதுடன் வாழ்க்கை என்ற பாடத்தை கற்பித்து மாணவர்களுக்கு ஒரு உண்மையான வழிகாட்டியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர்.ஒரு மனிதன் வாழும் காலம் முதல் அவன் மரணித்த பின்பும் பிறமனிதர்களால் போற்றப்படுவர். பலர் மனங்களில் ஒரு சிலர் தான் வாழவும் முடியும். ஆளவும் முடியும். அதில் ஆசிரியர் தொழிலில் இருப்பவர்கள் முதன்மை வகிக்கின்றனர்.இவ்வுலகில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் போற்றுதலுக்கும் மதித்ததலுக்கும் உரியதுமான தொழில் ஆசிரியர் தொழிலாகும்.

மற்ற பணிகளைப்போல ஆசிரியர் பணி என்பது ஒருவரின் வாழ்வாதாரத்திற்கான பணியல்ல.தனது வாழ்வையே ஆதாரமாக்கும் பணி.அந்தப்பணியில் வேண்டுமானால் வாழ்வை நகர்த்துவதற்கான ஊதியம் கிடைக்கலாம்.ஆனால் ஊதியத்திற்கான பணியல்ல என்பதுதான் ஒரு ஆசிரியரின் சிறந்த தத்துவமாகும்.ஆசிரியர் பணி ஒரு உயிரோட்டமான பணி என்பதுடன் ஆய்வுரீதியான ,உளவியல் ரீதியான,சேவை ரீதியான கால நேரமற்ற அர்ப்பணிப்புள்ள பணியாகவே கொள்ளமுடியும்.இங்கு வெறும் கல்வியை மட்டும் போதிக்காது ஒழுக்கம்,பண்பு,ஆன்மீகம்,பொது அறிவு, என அனைத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் உன்னத பணி எமது ஆசிரியர்களுக்கே உண்டு.

ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறைக்குள் மட்டுமே ஆசிரியர்களாக இருப்பதில்லை இருக்கவும் முடியாது.அவர் தம் வாழ்வில் பெரும் பகுதி நேரங்களை ஆசிரியர்களாகவே கடத்துகின்றனர்.அவர்களின் சேவைக்கு எல்லை கிடையாது.மனித வாழ்வில் திருப்பு முனையை ஏற்படுத்தி அதற்கு அர்த்தத்தை கொடுக்கும் ஒரு கடமை ஆசிரியருக்கு உள்ளது.உலகிலுள்ள பணிகளிலே சிறந்த பணி ஆசிரியர் பணி என்று சொல்லுமளவிற்கு பாரிய பொறுப்புக்கள் கொண்டதாகும் .இந்த பணிக்கு சிறந்த ஆளுமைமிக்க ,ஒழுக்கமிக்க தகுதியான நபர்களை தெரிவு செய்வது ஒரு அரசின் பொறுப்புமிக்க கடமையாகும்.

**கொவிற் தொற்றுக்கிடையே கல்வியை மீட்போம். என்பதே இன்றைய தொனிப் பொருளாகும். ஏணியாகவும் தோணியாகவும் இருந்து மனித வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட பாலமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்.**

'சமூகத்தின் ஏணிகளாகவும் தோணிகளாகவும்' இருந்து மனித வாழ்வில் வழியேற்பட பாலங்களை அமைத்துள்ள ஆசிரியர்களது பொதுவான பிரச்சனைகள் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டிய நாளும் இன்றாகும். ஆசிரியர்கள் இந்தப்பணியை மிகவும் தியாக உணர்வுடனும் பொறுப்புணர்வுடனும்,கடமையுணர்வுடனும்,பணியாற்ற வேண்டும். ஏனெனில் பொதுவாக இன்றைய ஆசிரியர்கள் சம்பளத்துக்கு வேலை பார்க்கும் ஆசிரியர்களாகவே தன் தொழிலை பார்க்கின்றனர்.பொதுவாக பாடசாலையில் கற்பிப்பதை விட தனியார் கல்வி நிலையங்களிலும் இணையவழி கற்பித்தலில் ஆர்வம் காட்டும் கற்பித்தலையும் இலாபமீட்டுவதையுமே இன்றைய காலத்தில் முனைப்பாக கொண்டுள்ளனர்.

பொதுவாக தனியார் கல்வி நிலையங்களிலும் இணையவழி வழியிலும் கற்பித்தல் முறைகளில் காட்டும் முனைப்பு பாடசாலைகளிலுள்ள வகுப்பறை கல்விகளில் இல்லை. இது இன்று ஒரு புறம் பெரும் குறைபாடுகளாக காணப்பட மறுபுறத்தே பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தாம் கற்பிக்கும் பாடத்திட்டங்களில் ஆசிரியர்களுக்கு தெளிவின்மை,கற்பித்தல் முறையில் தெளிவின்மை,

ஆளுமையற்ற சூழல் தனக்கு பிடித்த மாணவர்களை மட்டும் பாராட்டுதல் ,ஊக்குவித்தல்,கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.போன்றவற்றோடு மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுதல் என பல்வேறுபட்ட குறைபாடுளை இறை மாணவர்கள் எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் பல்வேறுபட்ட வாதப்பிரதிவாதங்களை முன்வைத்தாலும் இவற்றுக்கு எதிர்மறையான கண்ணியமிக்க தன் கடமையை செவ்வனே செய்கின்ற ஆசிரியர்களும் எம் சமூகத்தில் இல்லாமலில்லை.அதேவேளை சமீபத்திய காலங்களாக மாணவர்கள் மீது பாலுணர்வை தூண்டும் அல்லது பாலியல் ரீதியான சேட்டைகள் செய்யும் ஆசிரியர்களின் நடவடிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் பெற்றோர் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் இவர்கள் தொடர்பில் அச்சத்துடன் நோக்கும் சம்பவங்களும் அதிகரித்தும் வருகின்றன.

மாதா,பிதா,குரு என்னும் மூன்றாவது படிமுறை யில் பெற்றோருக்கு அடுத்த இடத்தில் வைத்து நோக்கப்படுகின்ற ஆசிரியர்கள் அவ்மாணவர்களின் வாழ்வின் ஏணியாக இருக்க வேண்டுமே தவிர வீழ்ச்சியின் திறவுகோலாக என்றுமே மாறிவிடக்கூடாது.

வகுப்பறைகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கிடையே நல்லுறவை கட்டியெழுப்பும் இடமாக அமையவேண்டுமே தவிர மாறாக குரோதம்,வன்மம்,போட்டி,பொறாமை என்பவற்றை வளர்க்கும் இடங்களாக இருத்தல் கூடாது .ஆனால் இன்றைய மாணவர்கள் மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் காயப்படும் இடங்களாக வகுப்பறைகள் மாறிப்போயிருப்பது வேதனையளிக்கும் ஒரு விடயமாகும்.




எனவே மாணவர்களின் தன் நலமேபெரும் பரிசு. எதிர்கால சமூகத்தை வடிவமைக்கும் பாரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள ஆசிரியர் சமூகம் தங்கள் பணியை திறம்பட செய்து மாணவர் உலகில் மாற்றத்தை கொண்டுவருவது மட்டுமன்றி நல் சந்ததியினரை உருவாக்கிட முன்வருவதல் வேண்டும்.

தன் தேவைக்காக பணி செய்திடாமல் சேவையாக நினைத்து பணி செய்திடும் தன்னலமற்ற ஆசிரியர் அனைவருக்கும் ஆசிரியர்தின நல் வாழ்த்துகள்.



Child Friendly Cities Initiative

# Batticaloa Kids Got Talent

# CONTEST

## For Children's Day 2021

வயதெல்லை: 5-15

உங்கள் ஆக்கங்களை எங்களுடன் புகைப்படமாகவோ அல்லது வீடியோ பதிவாகவோ பகிர்ந்து கொள்ளுங்கள்:

- வரைதல் (புகைப்படத்தை அனுப்பவும்)
- நடன வீடியோ
- பேச்சு வீடியோ
- வீட்டுத் தோட்ட வீடியோ சுற்றுப்பயணம்
- கைவேலைப்பொருட்கள் -உங்கள் சொந்த படைப்புகள் வீடியோவாக
- கதை சொல்லும் வீடியோ
- பாடல் பாடிய வீடியோ

கீழே உள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் ஆக்கங்களுக்காக தெரிவு செய்யவும்.
1.கோவிட் 19 தொற்றுநோய் உங்கள் வாழ்க்கை, கல்வி மற்றும் கனவுகளை எவ்வாறு பாதித்தது?
2. உங்கள் நகரை சிறுவர் சிநேகமாக எவ்வாறு பார்க்க விரும்புகிறீர்கள்?

உங்கள் படைப்புகளை பின்வரும் வாட்ஸ்அப் அல்லது மின்னஞ்சலில் 15.10.2021 க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

+94768183878

Tharniya.Thavendraan@CERIkids.org

ceri
unicef for every child
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்